தகவல் தொழில் நுட்பத்துறை, மைய அலுவலகம், எஸ்.பி.எஸ் மார்க், மும்பை 400001
DEPARTMENT OF COMMUNICATION, Central Office, S.B.S. Marg, Mumbai – 400001
போன் Phone: 91 22 2266 0502

*பத்திரிக்கை வெளியீடு*
*Reserve Bank of India*

இந்திய ரிசர்வ் வங்கி
வெப்சைட் Website: www.rbi.org.in
இ மெயில் Email: helpdoc@rbi.org.in

தேதி: மார்ச் 13, 2019

# நேஷனல் மெர்கன்டைல் கூட்டுறவு வங்கி லிமிடெட், லக்னோ, (யு.பி.) க்கு - அபராதம் விதிக்கப்பட்டது

வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டம், 1949 (கூட்டுறவு சங்கங்களுக்கு பொருந்தக்கூடியது) இன் பிரிவு 46 (4) உடன் இணைந்த பிரிவு 47 A (1) (c) விதிகளின் கீழுள்ள பொருளின்படி அதில் உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, கம்ப்ளெயன்ஸ்சமர்பிப்பதில் தாமதித்து ரிசர்வ் வங்கியின் அறிவுறுத்தல்கள் / வழிகாட்டுதல்களை மீறியதற்காக, உத்தரபிரதேச மாநிலம் லக்னோவில் உள்ள நேஷனல் மெர்கன்டைல் கூட்டுறவு வங்கி லிமிடெட் நிறுவனத்திற்கு ரிசர்வ் வங்கி ரூ 50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) அபராதம் விதித்துள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கி, வங்கிக்கு விளக்கம் கோரல் அறிவிப்பு அனுப்பியிருந்தது, அதற்கு பதிலளிக்கும் விதமாக வங்கி எழுத்துப்பூர்வ பதிலை சமர்ப்பித்தது. நிகழ்வின் உண்மைகளை பரிசீலித்தபின், இந்த விஷயத்தில் வங்கியின் பதில் மற்றும் தனிப்பட்ட விசாரணையில், இந்திய ரிசர்வ் வங்கி, மீறல்கள் நிரூபிக்கப்பட்டன என்றும் அபராதம் விதிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தது .

**அனிருதா டி.ஜாதவ்**
உதவி மேலாளர்

**செய்தி வெளியீடு: 2018-2019/2173**